கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

| | | |
|---|---|---|
| அ.சா.1 | | நாள் 21.12.2022 |
| அமர்வு வழக்கு எண். | 145/2019 | |
| பெயர் | ராஜ்குமார் | த/பெ |
| வயது | | தொழில் |
| ஜாதி | | மதம் |
| கிராமம் | | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை:

நான் சம்பாகட்டளையில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சாட்சிகள் சந்திரா, இனியவன் ஆகியோரை தெரியும். சீர்காழி அரசு மருத்துவமனையில் சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் நான் இருந்த போது போலிசார் வந்து எழுதப்பட்ட ஒரு தாளில் கையெழுத்து வாங்கி சென்றார்கள். அது எதற்காக என்பது தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். சாட்சியின் அந்த கையெழுத்து மட்டும் அசாஆ 1. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1ம் எதிரியை தெரியும். அவர் எனது சித்தப்பா. 1ம் எதிரி தனது பாதுகாப்பிற்காக என் வீட்டிற்கு எதிரில் உள்ள எனது மாமனார் அகோரம் வீட்டில் வந்து தங்கினார். அப்போது அவரது பாதுகாப்பாக எத்தனை பேர் வந்தார்கள் என்பது தெரியாது. 1ம் எதிரிக்காக பாதுகாப்பிற்கு வந்தவர்கள் எங்கள் ஊரில் உள்ள பிள்ளையார் கோவிலில் அமர்ந்திருப்பார்கள். அவர்கள் கோவில் என்றும் பார்க்காமல் மது அருந்தியதாக சொல்வது சரியல்ல. எனது தாயார் பெயர் ராணி. எனது தாயார் மேற்படி நபர்களிடம் போய் கோவிலில் வைத்து இவ்வாறு மது அருந்துகிறீர்களே என்று கேட்டார். அப்போது என் அம்மாவை அடித்துவிட்டார்கள் என்பது சரியல்ல. எனது தாயார் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தது உண்மை. 15.07.2015 அன்று மாலையில் நான் என் அம்மாவை பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்ததாக சொல்வது சரியல்ல. அவ்வாறு வந்ததாகவும் அப்போது எதிரிகள் கையில் கோடாரி மற்றும் அரிவாளுடன் வந்து குச்சிக்காரி மகனே நீ என்ன பெரிய ஆளா என்று கேட்டதாக சொல்வது சரியல்ல. மேலே கூறியவாறு திட்டி என்னை 1ம் எதிரி

அரிவாளால் இத்தோடு ஒழிந்து போ என்று சொல்லி வெட்டியதாகவும் அதில் எனக்கு தலையில் இரத்தகாயம் ஏற்பட்டதாகவும் சொல்வது சரியல்ல. என் அண்ணன் சாட்சி இனியவன் வசம் TN 09T4043 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனம் இல்லை. அவ்வாறு வண்டி இருந்ததாகவும் அதை எதிரிகள் உடைத்து சேதப்படுத்தியதாகவும் சொல்வது சரியல்ல. நான் வயலுக்கு சென்றுவிட்டு வரும்போது என்னை அடித்த மாதிரி இருந்தது. அதனால் நான் சிகிச்சைக்கு சேர்ந்தேன். சம்பவம் நடந்தது உண்மை என்றும் போலிசில் புகார் வாக்குமூலம் கொடுத்ததும் உண்மை என்றும் அதன் காரணமாக தான் சம்பவத்தை பகுதியாக ஒப்புக் கொள்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 2 நாள் 21.12.2022

அமர்வு வழக்கு எண். 145/2019

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இனியவன் | த/பெ | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை:

நான் திருவெண்காட்டில் வசித்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். சாட்சி சந்திராவை தெரியும். எதிரிகளை எனக்கு தெரியாது. ராஜ்குமார் புகார் கொடுத்தது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் திருவெண்காடு அக்ரஹாரத்தில் குடியிருக்கிறேன். அசா1 சம்பாகட்டளை அங்கு ஒரு பிள்ளையார் இருக்கிறது. அசா1ன் வீட்டிற்கு எதிரில் அகோரம் என்பவரின் வீடு இருக்கிறது. மேற்படி அகோரம் என்பவரின் மாப்பிள்ளை தான் 1ம் எதிரி அகோரம் என்பது தெரியாது. 7,8 வருடங்களுக்கு முன்னர் பிள்ளையார் கோவிலில் பிரச்சனை நடந்ததாக சொல்வதுஎனக்கு தெரியாது. அசா1 எனக்கு சித்தப்பா மகன். அசா1ற்கு 1ம் எதிரி என்ன உறவு முறை என்று எனக்கு தெரியாது. அசா1க்கு உறவு என்றால் எனக்கும் உறவு தான். அசா1புகார் கொடுத்தது சம்பந்தமாக என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். இந்த காயங்கள் சம்மந்தமாக விசாரித்தார்கள். எவ்வாறு காயங்கள் ஏற்பட்டது என்று அசா1 சொன்னார். நான் சொல்லவில்லை. அசா1 வாக்குமூலம் கொடுத்தாரா என்பது தெரியாது. எதிரிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்பதால் பாதி சம்பவத்தை ஒப்புக் கொண்டும், பாதி சம்பவத்தை மறுத்தும் சாட்சியம் அளிக்கிறேன் என்பது சரியல்ல.

எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை

இல்லை.